சுருக்கம்

நகர் ஊரமைப்புத் துறை – மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தை செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரத்திற்கு மாறுதல் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ2(1)) துறை

அரசாணை (நிலை) எண்.97

நாள்:12.06.2014
ஜய வருடம், வைகாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டது:

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் கடிதம் எண்.12962/2012/முதி1, நாள் 12.12.2012 மற்றும் 5.2.2014.

---------

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள், 07.11.2012 அன்று காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அரசு முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம், உறுப்பினர் செயலர் (பொறுப்பு), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம், செங்கல்பட்டு மண்டல துணை இயக்குநர் (பொறுப்பு) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்திற்கு தனி அலுவலகமின்றி செங்கல்பட்டு மண்டல அலுவலகத்தில் இயங்கி வருவதால், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மாமல்லபுரத்தில் ஐந்து ரதத்திற்கு அருகில் கட்டப்பட்டு சுமார் இரண்டு மூன்று ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்படாமல் இருக்கும் கடை கட்டிடத்திற்கு மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழும அலுவலகத்தை மாறுதல் செய்யவும், மாமல்லபுரம் செங்கல்பட்டினை விட மிகவும் அருகாமையில் அமைவதாலும் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் செங்கல்பட்டில் இயங்குவதைவிட மாமல்லபுரத்தில் இயங்கினால் பொது மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதால் மேற்படி அலுவலகத்தை மாறுதல் செய்யலாம் என்ற கருத்துருவினை நகர் ஊரமைப்பு ஆணையர் மூலமாக அரசின் ஒப்புதல் பெற மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தால் பரிந்துரைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்காணும் தீர்மானம் மற்றும் குறிப்புகளின் அடிப்படையில், மாமல்லபுரத்தில், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் கட்டப்பட்டு வாடகை பெறப்படாமல் இருக்கும் கடை கட்டிடத்திற்கு, மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அலுவலகம் மற்றும் மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமம் அலுவலகம் ஒன்றாக இயங்கும் வகையில், அலுவலக கட்டிடம் மாற்றப்படலாம் என்றும், மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமத்தினால், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு வாடகை செலுத்தப்படல் வேண்டும் எனவும் குறிப்பிட்டு அரசின் மேலாணையினை நகர் ஊரமைப்பு ஆணையர் வேண்டியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்கலாம் என முடிவெடுத்துள்ளது. அதன்படி, மாமல்லபுரம் ஐந்து ரதத்திற்கு அருகில் மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டப்பட்டுள்ள கடை கட்டடத்திலேயே தற்போது செங்கல்பட்டில் இயங்கிவரும் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் மற்றும் ஏற்கனவே மாமல்லபுரத்தில் இயங்கிவரும் மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழும அலுவலகங்கள் ஆகியன ஒன்றாக இயங்க அரசு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

4. சார்நிலை கருவூல அலுவலர், திருக்கழுக்குன்றம் அவர்கள் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலக சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் மேற்காணும் அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்படும்பொழுது, அவை சரியாக இருப்பின், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.9572/வீ.வ/2014, நாள் 10.4.2014–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகர் ஊரமைப்பு ஆணையர், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை–2.
தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு.
உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், மாமல்லபுரம்.
கருவூலம் / சார்நிலைக் கருவூலம், செங்கல்பட்டு / திருக்கழுக்குன்றம்.
அமைச்சர் (வீ.வ (ம) ந.வ) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
இகோ.உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.